DEPOSITION OF WITNESS

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I COURT, ERODE

C.C. No.346/2019

PROSECUTION WITNESS L.W.20/ P.W.8

| | | | |
|---|---|---|---|
| பெயர் | செந்தில்பிரபு | தகப்பனார் பெயர் | பாலசுந்தரம் |
| கிராமம் | | ஊர் | ஈரோடு |
| தொழில் | காவல் ஆய்வாளர் | வயது | |

**(எதிரிகள் ஆஜர் இல்லை. எதிரிகள் சார்பில் கு.வி.மு.ச. பிரிவு – 317–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது).**

Solemnly affirmed in accordance with the provisions of ACT X of 1873 of the day of 25.02.2026

**முதல் விசாரணை**

1) நான் தற்போது வடக்கு காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன்

2) வடக்கு காவல்நிலையத்தில் பணியாற்றிய உதவி ஆய்வாளர் ஆறுச்சாமி மற்றும் காவல் ஆய்வாளர் சுந்தரமூர்த்தி ஆகியோர்களின் கையொப்பம் எனக்கு பரீட்சயம் என்பதால் ஆவணங்களின் அடிப்படையில் அவர்களுக்காக நான் சாட்சியமளிக்கிறேன். கடந்த 30.03.2006 ம் தேதி, 16.15 மணிக்கு உதவி ஆய்வாளர் நிலைய பொறுப்பு அலுவலில் இருந்தபோது சந்துரு என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரின் பேரில் நிலைய குற்ற எண்.181/2006 சட்டப்பிரிவு 174Crpc ன் கீழ் வழக்கு பதிவு செய்துள்ளார். **(புகார் அ.சா.ஆ. 1 ஆகவும், முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.2 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது)**

3) முதல் தகவல் அறிக்கையின் அசலையும் வாதியின் புகாரையும் இணைத்து கனம் வட்டாச்சியர், ஈரோடு அவர்களுக்கு அனுப்பியும் இதர நகல்களை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் ஒரு நகலை அவரே புலன் விசாரணைக்கு எடுத்துக் கொண்டு 16.30 மணிக்கு சம்பவ இடம் சென்று சம்பவ இடத்தை பார்வையிட்டு சம்பவ இட சாட்சிகள் நாகராஜன், ஜெயராம் ஆகியோர் முன்னிலையில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். **( பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் அ.சா.ஆ. 3 ஆகவும் மற்றும் அ.சா.ஆ.4ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது)**

VANJI NATHAN R
Digitally signed by VANJI NATHAN R
Date: 2026.02.25 17:53:38 +0530

பின்னர் மாலை 17.00 மணிக்கு நல்லி மருத்துவமனை சென்று மருத்துவமனையிலிருந்த பிரேதத்தை சாட்சிகள் மற்றும் பஞ்சாயத்தார் முன்னிலையில் பிரேத விசாரணை மேற்கொண்டு சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். **(பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ.5 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது)** பின்னர் பிரேத பரிசோதனை செய்ய ஈரோடு அரசு மருத்துவமனைக்கு வேண்டு கோள் கடிதம் கொடுத்து காவலர் 1793 சுப்பிரமணி என்பவர் மூலம் பிரேத பரிசோதனைக்கு பிரேதத்தை அனுப்பி வைத்துள்ளார்.

5) வழக்கு சாட்சிகள் சந்துரு, பாபு, பாஸ்கரன், குமார், ரவி வர்மன், பாலமுரளி, ஜான் பாட்ஷா, கலிபுல்லா, அப்துல்காதர், ராஜகோபால், சதீஷ், நாகராஜன், ஜெயராம், சிவசங்கரன் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். இவ்வழக்கை மேல் விசாரணைக்கு காவல் ஆய்வாளர் திரு.சுந்தரமூர்த்தி எடுத்துக் கொண்டு ரஷீத்தின் பிரேதத்தை பரிசோதனை செய்த மருத்துவர் திரு.வெங்கடேஷ் என்பவரை விசாரித்து பிரேத பரிசோதனை அறிக்கை பெற்றுள்ளார். **(பிரேத பரிசோதனை அறிக்கை அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** மாவட்ட விளையாட்டு அலுவலர் சிவசங்கரன் என்பவரை விசாரித்து ஒப்பந்த அறிவிப்பு மற்றும் நீச்சல் குள ஒப்பந்த அறிவிப்பை பெற்றுள்ளார். **(அந்த ஒப்பந்த அறிவிப்பு அ.சா.ஆ. 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** சாட்சிகளின் விசாரணையில் இருந்து சம்பவம் உண்மை என தெரிய வந்ததால் எதிரிகளை தேடிய போது 21.04.2006 ம் வருடம் பகல் 12.15 மணிக்கு ஈரோடு, வ.உ.சி பூங்கா நீச்சல் குளம் முன்பாக வந்த போது அங்கு நின்று கொண்டிருந்த 1 ம் எதிரியை கைது செய்தும் 2-ம் எதிரியை அதே தினத்தில் பெரிய நாயக்கன் பாளையத்தில் உள்ள அவரது வீட்டில் வைத்து கைது செய்தும் 3-ம் எதிரியை ஈரோடு, வ.உ.சி பூங்கா கேட் முன்பாக கைது செய்துள்ளார். ரஷீத் பிரேதத்தை பரிசோதனை செய்த மருத்துவர் ரஷீத் தண்ணீரில் மூழ்கி மூச்சு திணறல் ஏற்பட்டு இறந்ததாக சான்று வழங்கியதால் இவ்வழக்கின் சட்டபிரிவை 174 Crpc லிருந்து 304 (A) இதசவாக மாற்றி சட்டபிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்துள்ளார். (**சட்டபிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.8 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**) இறுதியாக தனது புலன்விசாரணையை முடித்து எதிரிகள் மீது சட்டப்பிரிவு304(A) இதசவின் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

VANJI NATHAN R
Digitally signed by VANJI NATHAN R
Date: 2026.02.25 17:53:57 +0530

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

அ.சா.ஆ.7 ஒப்பந்த அறிவிப்பு ஆவணத்தை தவிர வேறு ஆவணங்கள் கைப்பற்றப்பட்டதா என்றால் இல்லை. அ.சா.ஆ. 7 ஆவணத்திற்கும் எதிரிகள் மீது தாக்கல் செய்த வழக்கிற்கும் எந்த சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. சாட்சிகளிடம் இருந்து இவ்வழக்கில் இறந்து போன நபரின் நீச்சல் குளத்தில் அனுமதிக்கப்பட்ட ரசீது எதுவும் கைப்பற்றப்படவில்லை என்றால் சரிதான். நான் சொன்ன நாள், நேரம், இடத்தில் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும் சரிவர விசாரணை செய்யாமல் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்யப்பட்டுள்ளது என்றாலும் சரிவர புலன் விசாரணை செய்யாமல் எதிரிகள் மீது இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றாலும் எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல. இந்த வழக்கு சம்பவம் எதிரிகளின் கவனக்குறைவால் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. சம்பவம் நடந்த நாள் அன்று விளையாட்டு போட்டிகள் நடந்து கொண்டிருந்ததால் நீச்சல் குளம் மூடப்பட்டிருந்தது என்றாலும் இறந்த நபரின் கவனக்குறைவால் தான் விபத்து ஏற்பட்டது என்றாலும் சரியல்ல. இறந்த நபரின் குடும்பத்திற்கு இழப்பீடு பெற்றுத் தரவேண்டும் என்ற காரணத்திற்காக பொய்யாக இந்த வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

Taken Down Before Me and Typed By the Typist in Open Court Read Over/ Interpreted to the witness/deponent and Admitted by the witness/deponent to be correct.

VANJI NATHAN R

Digitally signed by VANJI NATHAN R
Date: 2026.02.25 17:54:05 +0530

Judicial Magistrate No.I,
Erode.